## கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி

அ.வ.எண். 205/2018          நீ.சா.1 சிவகுமார்

SOLEMNLY AFFIRMED IN ACCORDANCE WITH THE PROVISIONS OF OATHS ACT OF 1969 OF THE DAY OF 05.11.2025

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | - | சிவகுமார் | தொழில் | - | வழக்கறிஞர் |
| த/பெ க/பெ | - | மாதவன் | ஜாதி | - | |
| கிராமம் | - | பொள்ளாச்சி | வயது | - | 63 |
| தாலூக்கா | - | பொள்ளாச்சி | தேதி | - | 05.11.2025 |

**வாதி தரப்பு விசாரணை**

நான் இவ்வழக்கில் நீதிமன்ற ஆணையராவேன். நான் வழக்கு சொத்தை பார்வையிட்ட போது நில அளவையருடன் தான் சென்றேன் என்றால் சரிதான். எனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ள கிழபுற தென்வடல் மதில் சுவரின் அளவுகள் என்ன என்றால் அது 100 அடி நீளமும், 4 இன்ச் அகலமும் கொண்டதாகும் .அவ்வாறு தான் எனது வரைபடத்தில் சரியாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் எனது அறிக்கையில் தட்டச்சு பிழை காரணமாக 4 இன்ச் அகலம் என்பதற்கு பதிலாக 4 அடி அகலம் என தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளது.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை**

எனக்கு இவ்வழக்கில் என்ன பணிக்காக உத்தரவு வழங்கப்பட்டிருந்தது என்றால் வழக்கு சொத்தின் பௌதீக தன்மை குறித்து கொண்டு நில அளவையர் உதவியுடன் வழக்கு சொத்தை அளந்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவு வழங்கப்பட்டிருந்தது. எனது அறிக்கையில் அளவை எந்த ஆவண அடிப்படையில் மேற்கொண்டேன் என்றால் வருவாய் ஆவணங்கள் அடிப்படையில் மேற்கொண்டேன். எனக்கு வழங்கப்பட்ட உத்தரவில் எந்த ஆவண அடிப்படையில் அளவை செய்ய பணிக்கப்பட்டிருந்தேன் என்றால் அவ்வாறு எந்தவித குறிப்பும் உத்தரவில் இல்லை. வழக்கு தரப்பினர்கள் எந்த ஆவண அடிப்படையில் அளவை செய்ய வேண்டும் என குறிப்பாணை ஏதேனும் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. அளவை எந்த இடத்தில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது என என் அறிக்கையில்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ( **வாதி தரப்பில் மேற்படி ஆட்சேபணைகள் குறித்து இடைகால மனுவில் ஆட்சேபணை தாக்கல் செய்யாத போது தற்போது கேள்விகள் எழுப்ப இயலாது என ஆட்சேபணை செய்யப்படுகிறது.)** எனது அறிக்கை சட்டப்படியானது அல்ல என்பதால் ஏற்றுக்கொள்ள இயலாது என்றால் சரியல்ல.

| |
|---|
| இச்சாட்சியம் என் முன்பு திறந்த நீதிமன்றத்தில் சாட்சி கூறியபடி நான் கூற தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. |
| **ஒப்பம் /- ( மு.ச.ஸ்ரீநாத்)**<br>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி<br>பொள்ளாச்சி |